# குமாரசூரியரே கொக்கரிக்காதே!

## தமிழ்ஈழப் பிரிவினை எனும் வாள் உறையுள் போடப்படவில்லை!


# சுதந்திரன்

SUTANTIRAN

● விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2008 ந, அவ்வல் 25 | பங்குனி 3 (16-3-77) புதன் | புத்தகம் 31 | இதழ் 94


## ஐக்கிய இலங்கை கலைந்த கனவு!

### கூட்டணிப்பிரமுகரின் சூடான பதில்!

"ஐக்கிய இலங்கை என்பது கலைந்துபோன கனவு; அழிந்துபோன ஓவியம்; தமிழ் ஈழமும் சிங்கள நாடும் முதலில் தனித்தனியே பிரிந்தும், அதே சமயம் இருபக்கத்திலுமுள்ள நல்லுறவுகளைப் பொறுத்து, முடியுமானால் பொதுப்பிரச்சினைகளில் இணைந்தும் வாழுவதே உண்மையான ஐக்கியத்துக்கு வழியாகும். இதுவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலையானகொள்கையாகும்; மாற்ற முடியாத அரசியல் தத்துவமாகும். இந்தக்கொள்கையை கூட்டணி எந்தச் சமயத்திலும் கைவிடப் போவதில்லை. எந்தப்பேச்சு வார்த்தை நடந்தபோதிலும், இருவேறுபட்ட தனித் தனிநாடுகளைக் கொண்டதே இலங்கை என்ற அடிப்படைக் கருத்திலிருந்து கூட்டணி நழுவப்போவதில்லை; இதை அறியாமல் ஐக்கிய இலங்கையை உருவாக்கவே கூட்டணியுடன் பேசுவதாக குமாரசூரியர் கொக்கரித்திருப்பதால் யாரும் ஏமாறப்போவதில்லை!"

—இவ்வாறு கூட்டணிப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபருக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

"21-2-77ல் பண்டாரநாயகா சர்வதேச மண்டபத்தில் பிரதமர் கூட்டிய பா. உ.க்களின் மாநாட்டில் கூட்டணி பா. உ. க்களின் சார்பில் உரைநிகழ்த்திய திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் கூட்டணியின் மாற்றமுடியாத இறுதிக் குறிக்கோள் முடிவு என்ன என்பதை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

சுதந்திரத் தமிழ் ஈழம் அமைப்பதொன்றே கூட்டணியின் முடிந்தமுடிபு; இறுதி லட்சியம் என்பதை மிகவும் தெளிவாக அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்

கூட்டணியாக, எந்த ஒரு இடைக்காலஏற்பாடுகளையும் செய்துகொள்ளாது. அதே சமயத்தில் அரசாங்கம் தானாக முன்வந்து ஏதாவது இடைக்கால ஏற்பாடுபற்றி எம்முடன் கலந்து ஆலோசிக்க விரும்பினால் கூட்டணியைத்தனியே அழையுங்கள்

—4-ம் பக்கம் பார்க்க

### கூட்டணி கருத்தரங்கில் கொழும்பு ஆயர் பேசுகிறார்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையினர் நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று(16.3.77) புதன்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி லோறீஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. பேரருட்திரு. சி. எல். அபயநாயக அவர்கள் "என்நோக்கில் தமிழர் — சிங்களவர் பிரச்சினை" என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

# வெற்றி யாருக்கு?

## ஜெயப்பிரகாசருக்கா? இந்திரா காந்திக்கா?

### இன்று வாக்கெடுப்பு ஆரம்பம்

இந்தியப் பொதுத்தேர்தல் மீதான வாக்கெடுப்பு இன்று ஆரம்பமாகிறது. வாக்கெடுப்பு மூன்று தினங்கள் நடைபெறும். வாக்குகள் எண்ணிக்கை 20-3-77ல் ஆரம்பமாகும். தேர்தல் முடிவுகள் 22-3-77 செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும்.


இந்தியப் பொதுத்தேர்தலில் இந்திய மக்கள் அளிக்கவிருககும் தீர்ப்பை அறிவதில் உலக மக்கள் ஆர்வத்துடன் இருந்துவருகின்றனர்.

இந்தப் பொதுத்தேர்தலில்தான் இந்தியாவிலுள்ள சகல எதிர்க்கட்சிகளும ஒன்றுபட்டு ஒரேயணியில் நின்று முதன்முதலாக ஆளுங்காங்கிரசுடன் மோதுகின்றன. இதற்குமுன் நடைபெற்ற தேர்தல்களில் எதிர்க்கட்சிகளிடையே இத்தகைய ஐக்கியம் ஏற்பட்டிருந்ததில்லை.

வட இந்திய மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் ஈடாட்டம கண்டுள்ளது. எதிர்க்கட்சிகளுக்கு பேராதரவு கிடைத்துள்ளது. இந்திரா காங்கிரசின் வெற்றி குறித்து பிரபல கம்யூனிஸ்ட் சார்பு ஏடான 'பிளிறஸ்' சந்தேகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டிலும் ஜனதா—தி.மு.க.-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணிக்கு பெருமஆதரவு காணப்படுகிறது. தி. மு. க.வின் செல்வாக்கு மீண்டும் வளர்ச்சியடைந்துள்ளது.





இந்தியா எதிர்காலத்தில் செல்லவேண்டிய பாதை ஜனநாயகமா? சர்வாதிகாரமா? இரண்டில் ஒன்றை இப்போதே தெரிவு செய்யுங்கள்; சர்வாதிகாரம் வேண்டுமென்றால் இந்திரா காங்கிரசுக்கு வாக்களியுங்கள். ஜனநாயகம் வேண்டுமென்றால் எதிர்க்கட்சிக்

—4-ம் பக்கம் பார்க்க



தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணியின் அதிர்ஷ்ட லாபச் சீட்டு விற்பனையை ஆரம்பித்து வைத்த திரு. சே. மா, செல்லத்தம்பு பா. உ, முதலாவது சீட்டை கூட்டணி ஆதரவாளர் திரு. பாலசிங்கத்துக்கு விற்கும் காட்சி. படத்தில் தொழிற் சங்கக்கூட்டணிசெயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன், இ. தொ. கழக பொதுச்செயலாளர் சட்டத்தரணி பரராசசிங்கம், திரு. சுப்பிரமணியம், ஈழவேந்தன் ஆகியோரையும் காணலாம்.

# தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை சிங்கள அரசினால் அங்கீகரிக்கப்படுமா?

பிரதமருக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குமிடையே நடைபெறக் கூடிய பேச்சுவார்த்தையின் பயனாக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அரசாங்கம் அங்கிகரிக்க முன்வருமா? தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைகொள்கையளவில் அங்கீகரித்துக் கொள்ளும் அதே வேளையில் தமிழ் பேசும் மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்குவதற்கு அரசாங்கம் இணங்குமா?

இந்தக் கருத்துப்பட 12-3-77 ட்றிபியூன் ஏடு தனது செய்திக் குறிப்பில் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது.

(1) தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளுதல்.

(2) தமிழ்மொழியின் உரிமைகளை அரசியல் சட்டத்தில்பொறித்தல்.

(3) தமிழ் ஈழத்துக்கு மாநில சுயாட்சி வழங்குதல்.

என்ற இந்த மூன்று திட்டங்களே பேச்சுவார்த்தை

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# மக்கள் குரல்

## முஸ்லிம்-தமிழர் உறவு வளர்க.

கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் அக்கரைப் பற்றைச் சேர்ந்த எனது முஸ்லிம் நண்பன் நூர்த்தீனும் பங்கு கொண்டார். அவரிடத்தில் ஏற்பட்ட மாற்றம் என்னை ஆச்சரியமடையச் செய்ததுடன் நம் தலைவர்களின் திறமையையும் எடுத்துக்காட்டியது.

ஆம், இற்றைக்கு ஒரு வருடம் ஆறு மாதத்திற்கு முன் ஒருநாள் நான் நண்பன் நூர்த்தீனுடன் துவிச்சக்கர வண்டியில் நெடிய பயணம் ஒன்றை மேற்கொண்டேன். பயணத்தின்போது என் அடிமனதில் பதிந்திருந்த தமிழர் — முஸ்லிம் ஒற்றுமை பற்றி நண்பனுடன் சில அபிப்பிராயங்களை பகிர்ந்து கொண்டேன். அப்போது நான் தமிழர் கூட்டணியின் பலத்தைப்பற்றியும், அதில் முஸ்லிம்—தமிழர்களின் பங்கைப்பற்றியும் பல நியாயங்களுடனும், ஆதாரங்களுடனும் எடுத்துக் கூறினேன். ஆனால் அதில் ஒன்றையாவது ஏற்க மறுத்த நண்பன், தங்கள் சமுதாயம் மேலோங்குவதற்கு தாங்கள் அரசுடனே தான் இருக்க வேண்டுமெனவும் அதைவிட நாம் தனிநாடமைப்பது அர்த்தமற்றது எனவும் கூறிவிட்டான். ஆனாலும் அதன் பின்பும் நாங்கள் நண்பர்களாக இருந்தது மட்டுமல்லாமல் அவரை எமது திசைக்கு மாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

என்னே புதுமை, கடந்த 7ம் திகதி என்னை அவர் சந்தித்தபோது உணர்ச்சி பொங்க 4ம் திகதி நடைபெற்ற தமிழர் கூட்டணி கூட்டத்தை விபரித்ததோடு, நம் தலைவர்களை, குறிப்பாக அண்ணன் அமிர்தலிங்கத்தை புகழ்ந்து கூறியும், நாமும் அவர்களுடன் சேர்ந்து தமிழ்ஈழம் அமைத்தே தீருவோம் எனவும் உறுதியளித்தார். அத்துடன் நான் முன்பு சொன்னபோது மறுத்துரைத்ததற்கும் மன்னிப்புக் கோரினார். இப்போது அவர் எனது இரட்டிப்பு நண்பர் என்பதையும் நான் சொல்ல வேண்டுமா?

எனது நண்பனை இலட்சியப் போருக்குத் திருப்பிவிட்ட தமிழ்த் தலைவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் ஒரே சந்திப்பில் இப்படியோர் மாற்றமானால் எங்கள் தமிழ் ஈழத்தில் தந்தை செல்வா உதயசூரியனை பறக்கவிடும் காலம் மிகத் தொலைவில் இல்லை.

தொடரட்டும் தலைவர்கள் தொண்டு.

வளரட்டும் இளைஞர்களின் இலட்சியம்.

மலரட்டும் நமது கையில் தமிழ்ஈழம்.

— வ. மாதவன்
புது நகர், அம்பாறை.

## சோறைவிட சுதந்திரனே உயர்ந்தது!

நான் மாராவிலையை வசிப்பிடமாகக் கொண்டு இருக்கிறேன். தங்களின் வாரவெளியீடான சுதந்திரனை உயிர்நாடியாக மதித்துவருபவன், வாரம் இருமுறை சிலாபம் சென்று சுதந்திரன் பத்திரிகையை பெறக்கூடியதாக இருந்தது அதுவும்கிடைப்பது மிகவும் கவலைக்குரியதாக இருக்கின்றது. ஒரு நாள் உணவு இன்றி இருந்துவிடலாம் ஆனால் வாரம் இருமுறை கிடைக்கும் சுதந்திரன் படிக்காமல் இருக்க முடியாது. 10 மைல் சென்றும் சுதந்திரனை வாங்க முடியாமல் போய்விடுகின்றது. இதற்கு இன்று ஏற்பட்டுள்ள தட்டுபாடு வாசகர்களின் துரதிர்ஷ்டமே. எனக்காக சுதந்திரன் காத்திருக்காது. அது கிடைப்பதும் சுவீப் அதிஷ்டம்தான்.

—எஸ். ஆறுமுகம்
அத்தினிய, மாராவிலை.

## இனிவேண்டாம் இத்தகைய வேண்டுகோள்கள்

9-3-77 சுதந்திரன் இதழில் "வேண்டாம் இன்னும் பிளவும் பிரிவும். கூட்டணியில் சேர்ந்து உழைக்க வருக" என்ற தலைப்பில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. ஞானமூர்த்தி என்பவரால் எழுதப்பட்டிருந்த அறிக்கையைப் படித்தேன்.

கேவலம் எத்தனையோ அறிவாளிகளை உள்ளடக்கியுள்ள தமிழர் கூட்டணி, சிறை பல சென்ற சிங்கங்களைக் கொண்ட கூட்டணி, தமிழ் பேசும் மக்களால் சரியாகவே அடையாளம் காணப் பெறாத ஓர் திரு. வி. நவரத்தினத்தையும் அவருடைய சுயாட்சிக் கழகத்தையும் பெரிதாக மதித்து, தப்புக் கணக்குப் போட்டு காலில் விழாத குறையாக அவரை எம்முடன் சேருங்கள், சேருங்கள் என அறிக்கை மேல் அறிக்கை விட வேண்டுமா? அப்படி என்ன தமிழர் கூட்டணியினர் ஓர் புறமும், திரு. வி. நவரத்தினம், தனித்து மறுபுறமும் கயிறிழுத்தால், திரு. நவரத்தினம்தான் வெற்றி பெறுவார் என்ற கோழைத்தனம் கொண்ட எண்ணமா.

தமிழ்பேசும் மக்களின் தற்போதைய நிலை அறிந்தும், இப்படி ஓர் ஒத்துழைக்க முடியாத மனிதரைத் தலையில் தூக்கிவைத்து ஆடினால், தமிழ் ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நம்மை சிங்கள மக்கள் கைகொட்டிச் சிரியாரோ?

முகவரியே இல்லாத ஒரு மனிதர், யார் இவர் எனச் சிங்கள மக்களுக்கே அறிமுகமில்லாதவர், இவரைப் போய் பெரியவர் என்பதில் ஓர் அர்த்தமுமில்லை. ஆதலால் இனியாவது, சுதந்திரனில் தமிழன் சுதந்திரம் பெறும்வரை, வேண்டாதவர்கள் பற்றிய செய்தியே வேண்டாம். அப்படி மீறி வருமாயின் தமிழ் இளைஞர்கள் சுதந்திரனை மட்டுமல்ல அறிவாற்றல் மிக்க பெருமக்களைக்கொண்ட தமிழர் கூட்டணியினரையே கேலிக் கண் கொண்டு பார்ப்பார்கள்.

திரு. நவரத்தினம் ஒருவரால்தான் கூட்டணி தழைக்குமென்றால், பிழைக்குமென்றால் தமிழர் கூட்டணியின் தலைமைப்பீடத்தை அவரிடமே ஒப்படைக்கலாமே. கேவலம் இதுவும் ஓர் அழைப்பாகுமா? விழுந்து கொண்டே இருக்கும் ஓர் பிள்ளையை தூக்கிவிட ஆள் இருந்தால் அது விழுந்து கொண்டுதான் இருக்கும். இதை மறப்பதில் அர்த்தமில்லை

—எஸ். நவஜோதி
இலங்கை தமிழணிச்சபை
செயலாளர்
226, ஏகாம்பரம் வீதி
திருகோணமலை.

# "தமிழ் தொழிலாளர்களிடையே இன்று புத்துணர்வு ஏற்பட்டுள்ளது!"

## அதிர்ஷ்டலாப சீட்டு விற்பனையை தொடக்கிவைத்து செல்லத்தம்பு உரை!

"தமிழ் ஊழியர்கள் அனைவரையும் ஒரே அணியின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் பல்லாயிரக் கணக்கான தமிழ் ஊழியர்கள் இத் தொழிற் சங்கக் கூட்டணியில் சேர்ந்துள்ளனர். தமிழ்த் தொழிலாளரின் நலன்கருதி பல திட்டங்களை வகுத்துள்ள தொழிற் சங்கக் கூட்டணி அவற்றைச் செயற் படுத்துவதற்கு பெருந்தொகையான நிதி தேவையாக உள்ளது. தொழிலாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துதல், கருத்தரங்குகள், பொருளாதாரத் திட்டங்கள், பொது அலுவலகம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு உடனடியாக இருபதினாயிரம் ரூபாவைச் சேமிப்பதற்கு அதிர்ஷ்டலாப சீட்டு இழுப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இவ்வியக்கம் வெற்றிபெற தமிழ் தொழிலாளர்களையும் பொது மக்களையும் ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றோம்."

இவ்வாறு தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் தலைவர் திரு செ. மா. செல்லத்தம்பு பா. உ. அவர்கள் அதிர்ஷ்ட லாபசீட்டு விற்பனை இயக்கத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் கொழும்பிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது. பல மொழிவழித் தொழிற் சங்க பிரமுகர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் திரு. செல்லத்தம்பு அவர்கள தொடர்ந்து பேசுகையில் — "தொழிற்சங்கக் கூட்டணி அமைக்கப்பட்டபின்னர் தமிழ் தொழிலாளர்கள் இடையே மறுமலர்ச்சியும்; விழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கிறது. இடதுசாரித் தொழிற்சங்கங்களில் இருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் தொழிலாளர்கள் இன்றுமொழிவழித் தொழிற் சங்கங்களில் சேர்ந்து வருகின்றனர். அரச கூட்டுத்தாபனங்களைச் சார்ந்த பெருந்தொகையான தமிழ் ஊழியர்கள் தொழிற்சங்கக் கூட்டணியில் சேர்ந்துள்ளனர். வாழைச்சேனைக் கடதாசித் ஆலைக்கூட்டுத்தாபன ஊழியர்கள் இதற்கு முன்னோடியாக விளங்கிவருகின்றனர். அரச கூட்டுத்தாபனங்கள் அனைத்திற்கும் ஒரே தொழிற்சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்" என்றார்.

அடுத்து அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. செல்வராசா அவர்கள் பேசுகையில் தமிழ் தொழிலாளர்களை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவந்து தொழிலாளர்களின் நலன் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு வேண்டிய நிதிகளை அதிஸ்டலாப சீட்டு மூலம் திரட்டுவதற்கு சகலரும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து நடைபெற்ற சீட்டு விற்பனையின் முதலாவது சீட்டை அரசாங்க ஒப்பந்ததாரர் திரு. மு. பாலசிங்கம் அவர்களும் ஆனந்தா கோப்பிரேசன் உரிமையாளர் திரு. க. சுப்பிரமணியம் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

செயலாளர்நாயகம் ஐ.தி. சம்பந்தன் அவர்கள் நன்றியுரை கூறினர்.

## வாகரையில் விடுதலை முழக்கம்

கல்குடாத் தொகுதி முன்னாள் பிரதிநிதி அமரர் மாணிக்கவாசகர் அவர்களின் நினைவுதினக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய கவிஞர் வாகரை வாணன் (ஈழத்துக் கவிஞன்) சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் பாரதப்போர் ஒன்று வந்தால் அதில் களப்பலி கூட்டுவதற்கான அரவான் பாத்திரத்தை எனக்கே தந்துவிடுங்கள் என்று அங்குதிரண்டு நின்ற மக்கள் மத்தியில் பகிரங்க அறைகூவல் விடுத்தார்.

கல்குடாத் தொகுதியிலுள்ள வாகரை என்னும் இடத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. கோறளை வடக்கு ஊராட்சி மன்ற முன்னாள் அக்கிராசனர் திரு. சீ. இளையதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்குடாத தொகுதி த. வி. கூ. அமைப்பாளர் இ. பத்மநாதன் உட்பட திருவாளர்கள்: கோவிந்தசாமி குரூஸ் அற்புதராஜா, அன்ரனிபயஸ் வாகரையூர் முகிலன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

வாகரை வாணன் தொடர்ந்து பேசுகையில் வாகரை தமிழ் இளைஞர் பேரவை மகளிர் பேரவையினரிடையே ஏற்பட்டிருக்கும் தமிழ் உணர்ச்சியினை எவராவது அடக்க முற்படுவாரேயானால் அது குமுறுகின்ற எரிமலையையும் கொந்தளிக்கும் அலைகடலையும் சுழன்றுவீசும் புயற்காற்றையும் அடக்குகின்ற கதையாகவே முடியுமென வலியுறுத்திக் கூறினர்.

அமரர் மாணிக்கவாசகர் அவர்களின் நினைவாக அவரது குடியேற்றமான மாணிக்க புரத்தில் வாகரை தமிழ் இளைஞர் பேரவையினரால் ஒரு நினைவு அரங்கம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் வாகரையூர் முகிலன் மகளிர் பேரவை துணைத் தலைவி செல்வி த. குகனேஸ்வரி வரவேற்புரை நிகழ்த்தினர், செல்வி அ. பவானி நன்றியுரை கூறினர்.

## தமிழ் நாடக விழா ஒத்திவைப்பு ஏன்?

கடந்த டிசம்பர் 1976ல் நடைபெறவிருந்த தமிழ் நாடகவிழா, காலம் கடந்த பின்னரும் ஒத்திவைக்கப் பட்டது ஏன்? இவ்வாறு தமிழ் கலைஞர்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

டிசம்பர் 1976ல் நடைபெற இருந்த தமிழ் நாடக விழா, இவ்வருடம் மார்ச்சில், சிங்கள நாடக விழாவுடன் ஒன்றிணைக்கப்பட்டு தேசியவிழாவாகக் கொண்டாடப்படும் என்று கலாசார அமைச்சின் தமிழ் நாடகக்குழு தீர்மானித்ததாகத் தினப்பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது.

ஆனால் நடந்ததென்ன? திடீரென தமிழ் நாடகவிழா தேசிய விழா வாகும் எனப் பட்டம் சூட்டப்பட்டது; பின்னர் அதுவும் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. தமிழ் நாடக விழாவை தனித் தமிழில் நடாத்துவதை விரும்பாதவர்கள், இந்தச் சூழ்ச்சியைக் கையாளுகின்றனர் என்றும் தமிழ்க் கலைஞர்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

(செய்தி: சிவா இராஜஜோதி)

## தமிழர் விடுதலைக்கூட்டணி நல்லூர் தொகுதி 15ம் வட்டார மாநகரசபைக் கிளை

தலைவர்: சு. சண்முகராசா. உபதலைவர்: சி. இராசு ஜே. பி. காரியதரிசி: ஆ. துரைராசசிங்கம். உபகாரியதரிசி: வே. சிவலிங்கம். பொருளாளர்: சி. சதாசிவம் பிள்ளை மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி ஏற்படுத்திய ஒற்றுமை நிலைக்க கட்சிகளைக் கலையுங்கள்!

தமிழ் அரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சி மற்றும் இதர தமிழ் கட்சிகளும் கழகங்களும் சேர்ந்து பலமுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியாக தற்போது இயங்கி வருகின்றது.

இவ் ஒற்றுமையை எமது எதிரிகளும் கண்டு தடுமாறுகின்றார்கள். ஏன் சிங்கள கட்சிகளே தமிழனின் ஒற்றுமை கண்டு பொறாமை அடைகின்றன. உலகத் தமிழ் மக்கள் பெருமை அடைகின்றார்கள். மன மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இப்படியான நேரத்தில் எமக்குள் தனித்தனி கட்சிகள் தம் பெயரில் அவற்றை புனரமைப்புச் செய்தல், வாலிப முன்னணிகளை உருவாக்கி புனரமைப்பு செய்தல் அவசியமா? காசி அண்ணா கேட்பதும் இது தான். தற்போதை நிலையில் எமக்கு கூட்டணி இயக்கமும் தமிழ் இளைஞர்பேரவை என்ற வாலிப இயக்கமும் போதுமே!

தமிழரசுக்கட்சி, தமிழ் அரசு வாலிப முன்னணி தமிழ் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி என்ற பிரிவினை வேண்டாம். இவை எல்லாம் தற்போதைய நிலையில் தமிழ் இனத்தை பலவீனப்படுத்தி விடும். அதாவது கூட்டணியை பலப்படுத்த முடியாது போய்விடும். நாம் விரும்பவேண்டியது தமிழரெல்லாம் ஒரே கட்சி ஒரே தலைமை, ஒரே கொடி, ஒரே சின்னம் என்றநிலைமை தான். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது மறக்கப்படலாகாது.

கூட்டணி என்ற இயக்கமும் தமிழ் இளைஞர் பேரவையும் மட்டும் தமிழரிடத்தில் இருந்தால்போதும்.

இவ்விரு இயக்கங்களையும் கண்டுதான் சிங்களக் கட்சிகள் இனியும் தமிழனை விலைக்கு வாங்கமுடியாது என்பதைப் புரிந்துகொண்டார்கள். தமிழருக்கு பிரச்சினை என்பது இல்லை என்றவர்கள் தற்போது தமிழர் பிரச்சினைகளை ஒத்துக்கொள்வது மட்டுமல்லாமல் பதவிக்கு வந்தால் எமது கட்சி தான் தமிழர் பிரச்சினையை தீர்க்கும்; எமது கட்சிதான் தீர்த்து வைக்கும் என்ற விளாசலில் விழுந்தடிக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் கூட்டணி என்ற ஒரே இயக்கமும் த. இ. பேரவை என்ற ஒரு வாலிப முன்னணியும் இயங்குவது தான்!

சிங்கள கட்சிகளின் அடிவருடியாக இருந்துவரும் சில தமிழ் பிரதிநிதிகள் தமிழ்பிரச்சினைகளை தீர்க்கும்படி தத்தமது தலைவர்களை வற்புறுத்தி வருகிறார்கள்; சிலர் தமிழரது ஒற்றுமை கண்டு நிலை கலங்கி சிங்கள கட்சிகளில் இருந்து விலகி வருகின்றார்கள். அவர்களிலும் சிலர் அரசியல் உலகத்தையேவிட்டு விலகி நிற்கின்றார்கள். அப்படி சிங்கள கட்சியைவிட்டு விலகியவர்கள் மீண்டும் தமிழ் கூட்டணிதான் ஏற்றகட்சி என்று தமிழர் கூட்டணியில் சேர்கின்றார்கள்.

இன்னும் சிங்களக் கட்சிகளில் ஒட்டிக்கொண்டிருந்து வரும் தமிழ் பிரதிநிதிகளுக்கு சிங்கள கட்சி எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டை என்ற உண்மை வெகுவிரைவில் விளங்கும். அப்போது அவர்கள் தத்தமது சிங்கள கட்சிகளை விட்டுவிட்டு வெளியேறி தமிழ் கூட்டணியில் சேர்வார்கள். இந்த உண்மை தற்போது கசப்பாக இருக்கும்; ஆனால் காலம் வந்தே தீரும்.

இப்படியான மாற்றம் ஏற்பட தேவையானது இன ஒற்றுமை, தமிழர்களுக்கு தமிழர்கூட்டணி என்றஇயக்கம் மட்டுமே இயங்கவேண்டும். இக்கூட்டணியை உசார்படுத்துவதற்கு தமிழ் இளைஞர் பேரவை என்ற ஒரே ஒரு வாலிப இயக்கம் மட்டும் இயங்கவேண்டும். இதை கூட்டணியிலுள்ள கட்சிகள் அனைத்தும் சிந்தித்துப் பார்த்து தங்கள் கட்சிகளையும் வாலிப முன்னணிகளையும் கலைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

தமிழா ஏமாறாதே
தமிழா ஏமாற்றாதே

—பொ. விஜயேந்திரன்
இரத்மலானை

## கலைச்செல்வனுக்கு பாராட்டு விழா

கலைத்துறையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஈடுபாடுகொண்டு உழைத்து வரும் கலைஞர் கலைச்செல்வன் அவர்களை கௌரவிக்கும் முகமாக பிரமாண்டமான முறையில் பாராட்டு விழா ஒன்றினை ஓம் சரவண புரொடக்ஷன் ஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்வைபவத்தை சிறப்புற நடாத்த கலைவேந்தன் ஸ்ரீசங்கர் தலைமையில் "கலைச்செல்வன் வெள்ளி விழாக்குழு" ஒன்றை அமைத்துள்ளனர். இதன் செயலாளராக நடிகர் இரத்தினபுரி எஸ். என். நடராஜா, தெரிவு செய்யப்பட்டுள்ளார். கமிட்டி அங்கத்தினர்களாக எஸ். என். தனரத்தினம் அந்தனி ஜீவா, எம். மொஹீதீன், எம். எம். ஏ. லத்தீப் எம். ஆர். உல்பத் நஸார் எச். யூ. தாஹிரா, கங்கா எஸ். எஸ். மணியன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனனர்.

## மூதூர் தமிழர் கூட்டணி கிளை நிர்வாகிகள்!

தலைவர்: டாக்டர், அன்ரனி ரூேசீடீவாஸ், உபதலைவர்: வே. நவரெட்னம், செயலாளர்: பூபா. மதுரநாயகம். உபசெயலாளர்: தீசன்குருஸ். பொருளாளர்: க. கயிலாயபிள்ளை. செயற்குழு உறுப்பினர்களாக: ஓ குலோந்திரன், மு. கணேசபிள்ளை, கா. இராமலிங்கம், அ. அருள்நாதன், அ. ஜோதிலிங்கம் சு. கணகசிங்கம். ஆகியோர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இக்கூட்டம் மூதூர் தே. அ. பே. உறுப்பினர் திருவாளர் அ. தங்கத்துரை தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர்களில் ஒருவரான திரு. அருளப்பு ரூேச்டீவாஸ் அவர்களும் கருத்துரையாற்றினார். கூட்டத்தின் முடிவில் செயலாளர் பூபா. மதுரநாயகம் நன்றி உரை கூறினார்.

## கிளிநொச்சி மாவட்ட த.வி.கூ. நிர்வாகிகள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டகிளையின் பொதுச் சபைக்கூட்டமும் புதிய செயற்குழுத் தெரிவும் 20-2-77 ஞாயிற்றுக் கிழமை காலை கிளிநொச்சியில் உள்ள இயக்க தலைமைச் செயலகத்தில் திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டணியின் இணைச்செயல் அதிபர்களான திரு. அ. அமிர்தலிங்கம் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். புதிய நிர்வாகிகள் தெரிவில் திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ. தலைவராகவும் துணைத் தலைவர்களாக திருவாளர்கள் ச. மு. முருகேசு, இ. கிருஷ்ணராசா, கா. செல்லையா சு. பொன்னையா பொ. தர்மலிங்கம், இரா. நாகேந்திரம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இணைச்செயலாளர்களாக திரு. க. ஏகாம்பரம் திரு. ப. வை. ஜெயபாலன் ஆகியோரும் பொருளாளராக திரு. மா. சண்முகலிங்கமும் தெரிவாகினர். அபிப்பிராய பேதங்கள். கலந்துரையாடலின் மூலம் சுமூகமாகதீர்த்து வைக்கப்பட்டன. இளைஞர் பேரவை மகளிர் பேரவை ஆகியனவற்றுக்கு பழைய செயற்குழுவினரே மீண்டும் தெரிவாகினர்.

## நல்லூர் தொகுதி தமிழர் கூட்டணி அமைப்புக்குழு

நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்புக் குழுக்கூட்டம் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் அமைப்புக்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், உபதலைவர் திரு. க. சிவதாசன், செயலாளர்: திரு. க. பரமசாமி. உபசெயலாளர்: திரு. ரி. எஸ். லோகநாதன், பொருளாளர்: திரு. இ. விசுவநாதன். மற்றும் 25 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பழிவாங்கல் முயற்சி பயன்தரவில்லை

கடந்த 27-2-77ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளையொன்று யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் திறந்து வைக்கப்பட்டதோடு உத்தியோகத்தர் தெரிவை அடுத்து கருத்தரங்கும் அங்கு இடம்பெற்றது.

முஸ்லிம்வட்டாரத்தில் த. வி. கூ. கிளை திறந்து வைக்கப்பட்டதும் அவ்வட்டாரத்தின் எழுச்சியுள்ள இஸ்லாமிய இளைஞர்களின் முயற்சியால் பிரமுகர்கள் பலரும் த. வி. கூ.வில்சேர்ந்துகொள்ளப்போவது உறுதியாகிவிட்டதை அடுத்து யாழ் சுதந்திரக்கட்சி வட்டாரத்தினரைக்கிலிபிடித்தாட்டுகிறது. எனவே அவசரகாலச் சட்டம் அகற்றப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையிலும் பொலிசாரை ஏவி ஆதரவாளர்களை எச்சரிக்கவும் பயமுறுத்தவும் செய்கின்றனர்.

முஸ்லிம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள த. வி. கூ. புதிய கிளையின் உத்தியோகத்தர்களது முகவரிகளையும் — பெயர்களையும் யாழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசாரிக்கவும் சம்பந்தப்பட்டவர்களை எச்சரிக்கவும் முற்பட்டுள்ளனர். என்று சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் இருந்து புகார் கிளம்பியுள்ளது.

இது பற்றி த. வி. கூ. யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர்சட்டத்தரணி திரு. வெற்றிவேலுயோகேஸ்வரன். த. வி. கூ. தலைவர்களுடன் நடவடிக்கை எடுத்துவருவதுடன் நிலைமைகளை அவதானித்து வருகின்றார்.

த. வி. கூ. கிளையை முஸ்லிம் வட்டாரத்தில் அறிமுகபடுத்துவதில் அதிகம் உழைத்த யாழ். மாநகர சபைஊழியர் ஒருவர், சு. க. அமைப்பாளரான முன்னாள் மாநகர சபை அங்கத்தவர் ஒருவரால் எச்சரிக்கப்பட்டும் உள்ளார். "ஏன் ஊருக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றாய்? பேசாமல் இரு" என்று சம்பந்தப்பட்ட அமைப்பாளர் கேட்டுக்கொண்டாராம். அவ்வூழியர் அதனை அடுத்து பழிவாங்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் இந்தப்பழிவாங்கல் முயற்சி பயனளிக்கவில்லையாம்.

## முல்லைத்தீவு தொகுதியில் இளைஞர் பேரவை அமைப்புதுரிதம்!

புதிய முல்லைத்தீவுத் தொகுதியில் கிராமங்கள் தோறும் தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் யாவும் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன. ஒட்டுசுட்டான். ஒலுமடு, கரிபட்டமுறிப்பு, முத்தையன் கட்டு இடதுகரை, முத்தையன் கட்டுவலதுகரை, கற்சிலைமடு, வவுனிக்குளம் 1ம் படிவம், பாண்டியன் குளம், துணுக்காய், மல்லாவி, முல்லைத்தீவு முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, நாயாறு, தண்ணீரூற்று, போன்ற கிராமங்களில் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் புதிய முல்லைத்தீவுத் தொகுதியின் அமைப்பாளர்களான திரு. சி. கணேசமூர்த்தி, திரு. கனக தவராசன் இருவரும் கவனித்து வருகின்றனர்.

புதிய முலைத்தீவுத் தொகுதியின் ஏனைய கிராமங்களில் உள்ள தமிழுணர்வுமிக்க இளைஞர்களை அவ்வவ் இடங்களில் த. இ. பே. கிளைகளை ஆரம்பிக்க திரு. சி. கணேசமூர்த்தி அமைப்பாளர். த. இ. பே. மாங்குளம் என்ற முகவரிக்கோ. திரு. கனகதவராசன் அமைப்பாளர் த. இ, பே. மாமூலை முள்ளியவளை என்ற முகவரிக்கோ தொடர்பு கொள்ளும்படி கேட்கப் படுகின்றனர்.

## இளைஞர் பேரவையில் அணி திரளுக! சத்தியசீலன் அழைப்பு

மாணவர்களும் இளைஞர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இருந்து எதிர்பார்ப்பது என்னவென்றால் வர இருக்கும் ஒரு தேர்தலில்தான் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப்போட்டியிடலாம். அதன் பின் நடைபெறும் தேர்தல்கள் சுதந்திரத் தமிழ்ஈழத்தில்தான் நடைபெறவேண்டும். எனவே போராட்டத் திட்டங்களை வகுத்து இளைஞர்களை சரியானமுறையில் வழிகாட்டுங்கள் என்று தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தாமதம் செய்தால் இளைஞர்களாகிய நாங்கள் எந்த வழியைக் கையாள்வோம் என்பதை சம்கால உலக வரலாற்றை தெரிந்துகொண்டிருக்கும் நீங்கள் மறக்கமாட்டீர்கள்.

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய சிறைமீண்ட இளைஞர் பொ. சத்தியசீலன் பீ. ஏ. கூறினார்.

இன்று மாணவர்களையும்-இளைஞர்களையும் போராட்டப் பாதைக்கு அழைத்து செல்லும் ஒரு இயக்கம் தமிழ் இளைஞர் பேரவை என்றும் அதன் கட்டுப்பாட்டுக்கும் வழிநடத்தலுக்கும் யாவரும் கீழ்ப்படியவேண்டும் என்றும் அவர் மேலும் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தமிழ் ஈழ விடுதலைக்கான ஒரு பெரும் அரசியல் இயக்கம் என்றும் தமிழ் இளைஞர் பேரவை தான் சுதந்திரப் போராட்டத்துக்கான மாணவ—இளைஞர் இயக்கம் என்றும் அவற்றில் தமிழர் யாவரும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து தமிழ்ஈழம் அமைக்கும் போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் தமது பேச்சின்போது கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் மலையகத்தைச் சேர்ந்த கவிஞர் குறிஞ்சித்தென்னவனும் திரு. பெருமாள்சாமியும் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையொன்றைத் தவிர வேறெதுவும் பேசவேண்டாம்

சுதந்திரன்
SUTANTIRAN

## கூட்டணித் தலைவர்களிடம் இலண்டன் தமிழர் வேண்டுகோள்

'இலங்கையில் அரசியல் நிலையில் எதிர்பாராத திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆளும்கட்சியுடன் தமிழர்கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த விரும்பியகாலம் போய் தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் ஆளும்கட்சிபேச்சுவார்த்தை நடத்தமுனையும் காலம் வந்திருக்கிறது. த. வி. கூட்டணி இந்நிலையில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். கடந்தகால அனுபவங்கள் விடுதலைத் தலைவர்களுக்கு நல்ல பாடங்களைப் புகட்டியிருக்கிறது. கூட்டணித்தலைவர்கள் என்ன முடிவு எடுத்தாலும் அது தமிழர்களின் எதிர்கால நலன் கருதி எடுத்த சிறந்த முடிவாகவேயிருக்கும். கூட்டணித்தலைவர்களில் ஈழம் வாழ் தமிழர்களுக்கு மாத்திரமன்றி வெளிநாடுகளில் வாழுபவர்களுக்கும் நிறைய நம்பிக்கை உண்டு"

இவ்வாறு சட்டத்தரணியும் முன்னாள் தமிழர் கூட்டணிப் பொருளாளருமாகிய திரு. அ. கும்ரகுரு, இலண்டன் தமிழர் கழகத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பேச்சுவார்த்தை நடத்துவதாயிருந்தாலும் கூட அது பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடத்துவதுதான் சாதகமாயும் பலனுள்ளதாயுமிருக்கும் என்றார்.

என்றும் கோரிக்கை விடுத்தார்.

சென்ற வருட உத்தியோகத்தர்களே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலண்டன் தமிழர் கழகத்தின் சிலமுக்கிய உறுப்பினர்களும் முன்னாள் தமிழர் கூட்டணியின் பிரமுகர் ஒருவரும் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைக் கண்டு பேசிவருகிறார்கள். இவ்வாண்டு ஆனிமாதத்தில்நடக்கவிருக்கும்கொமன்வெல்த் பிரதம அமைச்சர்கள் மாநாட்டின்போது பாராளுமன்றத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்சினையைக் கிளப்பவேண்டுமென வற்புறுத்திவருகிறார்கள். நல்ல ஆதரவு கிடைப்பதாகத் தெரிகிறது. அதாவது, சோல்பரி திட்டத்தின்மூலம் தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டது என்பதை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களாம்.

அடுத்து கழகத்தின் செயலாளர் திரு. ஆர். மகேந்திரா பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விடுதலைக் கோரிக்கையைத்தவிர வேறெந்த அடிப்படையிலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும் அடுத்த பொதுத் தேர்தலில் இளைஞர்களை அபேட்சகர்களாக நிறுத்தவேண்டும்

# காசி ஆனந்தனுக்கு பாதை திறக்கப்பட்டுவிட்டது!

"மட்டக்களப்பு தந்த முடிசூடாப் பாவேந்தர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் மக்களின் தலைமையை ஏற்று அவர்களை வழி நடத்தவிருக்கிறார். பெரியவர்களின் ஆசியுடன் அதற்குரிய பாதை திறக்கப்பட்டுவிட்டது; அவரது பயணம் தொடரவிருக்கிறது; அவர் கொடியோடு வந்திருக்கிறார்; முடியோடு திரும்பவிருக்கிறார்!

—பாட்டாளிபுர கூட்டத்தில் ஈழவேந்தன்.

## குமாரசூரியரே கொக்கரிக்காதே....

—1-ம் பக்கத் தொடர்

என்று அவர் அக்கூட்டத்தில் எடுத்துக் கூறியிருந்தார்.

அதாவது தமிழ்ஈழப் பிரிவினைக் கொள்கையை — கோட்பாட்டை நெஞ்சில் ஏந்தியபடியே உங்களுடன் பேசுவோம் என்று அவர் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

இப்படி அவர் பேசிய பின்னர்—கடந்த ஏழு ஆண்டு காலமாக தமிழர் கூட்டணியை அரசியலில் ஒதுக்கப்பட்டவர்களாக — தொழு நோயாளிபோல — ஒதுக்கி வைத்து அதிகாரத் திமிர் பிடித்து ஆட்சி நடத்திய சிறிமா அம்மையார் கூட்டணியை பேச்சுவார்த்தைக்குத் தானே வலியவந்து அழைத்திருக்கிறார்.

கூட்டணியை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு — தமிழினத்தின் செயற்கைத் தலைவர்களாக குமாரசூரியரையும், அருளம்பலத்தையும், இராசன் செல்வநாயகத்தையும் விநோதனையும் தமிழ் மக்கள் மீது திணிக்கமுயன்று மூக்கறுபட்ட அம்மையார், இப்போதுதான் உண்மை நிலையை உணர்ந்து— கூட்டணியிடமிருந்து தமிழ் மக்களைப் பிரிக்கமுடியாதென்பதைப் புரிந்துகொண்டு, கூட்டணித் தலைவர்களை பேச்சுக்கு அழைத்திருக்கிறார்.

கூட்டணித் தலைவர்களே தமிழினத்தின் உண்மையான தலைவர்கள் என்பதை ஆட்சி கவிழப்போகும் சமயத்தில்தான் சிறிமா அம்மையார் உணர்ந்திருக்கிறார்.

கூட்டணியுடன் பேசாமல் வேறு யாருடன் பேசினாலும் தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாதென்பதை அவர் இப்போதுதான் புரிந்துகொண்டிருக்கிறார்.

எனவேதான் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார்.

இந்நிலையில் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்காகவே பிரதமர், தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக குமாரசூரியர் கூறியதாக வீரகேசரி 11-3-77 இதழில் வெளிவந்திருக்கும் செய்தி நகைப்புக்கிடமானது.

தமிழ் ஈழப்பிரிவினை என்ற வாளை உறையுள் போடாமலே தான் கூட்டணித்தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு போவதென்று அறிவித்திருக்கிறார்கள்.

பிரிவினைக் கொள்கையை கூட்டணி கைவிடும்வரை அதனுடன் பேசப்போவதில்லையென்று கூறித்திரிந்தவர்கள் இன்றைய ஆட்சியினர்!

தனிநாடு கொள்கையை கைவிடும்வரை கூட்டணியுடன் பேசமாட்டோம்— என்று சிறிமாவோ முன்பு கூறினார்; இலங்கரத்தின கூறினார்; பீட்டர் கெனமன் கூறினார்; ஏன் குமாரசூரியர் கூடத்தான் கூறினார்.

இப்போது நடந்திருப்பது என்ன?

கூட்டணி பிரிவினைக் கொள்கையை கைவிடப் போவதில்லையென்று பிரதமர் முன்னிலையிலேயே— ஏனைய அமைச்சர்கள் முன்னிலையிலே — திட்டவட்டமாகக் கூறிவிட்டது. அதன் பின்பும், கூட்டணியை அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது.

கொள்கையைவிட்டு ஓடுகின்ற கூட்டம் கூட்டணியல்ல; கூட்டணியிலுள்ள சாதாரண தொண்டனே கொள்கைக்காக உயிரைக் கொடுக்கும்போது தலைவர்களா கொள்கையை விட்டுக் கொடுப்பார்கள்?

தமிழ் ஈழப் பிரிவினைக்காக 20 ஆண்டு சிறைவாசம், சொத்துப் பறிமுதல், அனைத்துக்கும் தயாராக இருந்தவர்கள் அவர்கள்!

எனவே குமாரசூரியரே! வீணாக கொக்கரிக்காதீர்! என்று உமக்குப் பணிவோடு கூறிவைக்க விரும்புகிறோம்.

## நற்பிட்டிமுனை த. வி. கூ. கிளை

தமிழர் விடுதலைக் கூட்டணி நற்பிட்டிமுனை கிளை அமைப்பு த. வி. கூ. கிளைத் தலைவர் மா. தம்பிராசா அவர்களின் தலைமையில் நடந்தேறியது கூட்டணிக் கிளை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: திரு. மா. தம்பிராசா, உபதலைவர்: த. ஜீவநாதன், செயலாளர்: க. இராஜகுலேந்திரன், துணை. செயலாளர்: ஆ. அரசரெத்தினம், பொருளாளர்: கா. மாரிமுத்து, நிருவாக சபை உறுப்பினர்கள்: கு. கணபதிப்பிள்ளை, சி. சிவகுருநாதன், கா. அழகையா, த. துரைசிங்கம், க. சந்திரசேகரம், ம. பொன்னுத்துரை, நா. மாணிக்கவாசகர், பொ. செல்வராசா.

அமைப்புக் கூட்டத்தின் போது திருவாளர்கள்: பி. வி. கந்தையா,(நொத்தாரிஸ்) ஆ. வேல்முருகு, (ஆசிரியர்) இரா. பன்னீர்செல்வம், கலந்து கருத்துரை ஆற்றி சிறப்பித்தனர்.

## தமிழ் தேசிய—

—3-ம் பக்கத் தொடர்

யின்போது ஆலோசிக்கப்படகூடுமென்றும் இச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட சலுகைகளை சிறீலங்கா சுதந்திரக்கட்சி வழங்கமுடியுமென்றும், பண்டாரநாயகாவின் பெயரைக் கூறி சிங்கள மக்களை சமாளித்துவிட முடியுமென்றும், இந்த உரிமைகளை தமிழருக்கு வழங்கவேண்டுமென்பதில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைசேர்ந்தகணிசமான பா. உ.க்கள் ஆர்வம்கொண்டிருப்பதாகவும், ட்றிபியூன் செய்திமேலும் கூறியுள்ளது.

## வெற்றியாருக்கு?

— 1ம் பக்கத்தொடர்

கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று ஜனதா கட்சிப் பிரமுகர்கள் இந்தியப் பொதுமக்களிடம் கூறியுள்ளனர்.

ஜனதா கட்சியையே ஆதரிக்குமாறும் சர்வாதிகாரத்தை நிராகரிக்குமாறும் நோய்ப்படுக்கையில் ஆஸ்பத்திரியிலிருந்தவாறு ஜெயப்பிரகாஷ் நாராயணன் இந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் பொருளாதாரத் துறை கோகலே நிறுவனத்தின் ஆணையாளர் திரு. வி. எம் தண்டேகர் தலைமையில் அவசரகாலச்சட்டம் புத்துயிர் பெறுவதை அனுமதிக்காதவர்களையே (அதாவது ஜனதா கட்சியினரே) பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யுமாறு இந்திய அறிஞர்கள் குழு ஒன்றும் இந்திய மக்களை வேண்டியுள்ளது.

சுடர்

ஈழத்தின்
மிகச் சிறந்த
கலை இலக்கிய ஏடு
பங்குனி இதழில்....

- கலைஞர் கருணாநிதி,
- இரசிகமணி கனக செந்திநாதன்
- பேராசிரியர் 'கல்கி'
- கோவை மகேசன் ஆகியோரின் கட்டுரைகள்
- தினமணி கதிர் ஆசிரியர் சாவியுடன் ஒரு செவ்வி!
- பி. பி. சி. தமிழோசை 'சங்கர்' தரும் கருத்து
- நான்கு சிறுகதைகள் மற்றும் பல அம்சங்களுடன்

19 - 3 - 77
சனிக்கிழமை எங்கும் கிடைக்கும்

விலை ரூபா ஒன்று மட்டுமே

மில்க்வைற் செய்தி- வெளியீடு 15

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் மார்ச் மாதம்-6ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org